International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20-3 July - September 2026

Published on 14, Jul - Sep 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# கம்பராமாயணத்தில் கம்பர் கூறும் அரசியல் நெறிகள்

**இரா. சங்கீதா**
பெரியார் பல்கலைக்கழக பகுதிநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

**முனைவர் சா. பூங்கொடி** உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை, ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி(தன்னாட்சி), சேலம் 16

**ஆய்வுச்சுருக்கம்**

கம்பராமாயணத்தின் பொருளும் சுவையும் படிப்போரை இன்றளவும் கவர்ந்திழுத்து வருகிறது. மக்களுக்கான அரசு அதன் செயல்பாடுகள் குறித்த நெறிகளை தனது கவித்துவத்தால் வகுத்தவர் கம்பர். மன்னன் மக்களின் சேவகனாக இருக்க வேண்டும், குடிமக்களின் நன்மைக்காக வாழ்பவனாக இருக்க வேண்டும் என்று இயம்புகின்றார். மக்களுக்கும் மன்னனுக்கும் உள்ள தொடர்பை மக்களாட்சி முறைக்கண் கொண்டு அரசியல் வகுத்துள்ளார். இராம காதை பெரிதும் அரசியல் நிகழ்வுகளை அடிப்படையாக கொண்டே அமைந்துள்ளது. இவ்வாறு கம்பர் படைத்துள்ள அரசியல் நெறிகளில் சிலவற்றைக் குறித்து இக்கட்டுரை அமைகிறது.

**முதன்மைச் சொற்கள்** - குடிமக்கள், மக்களாட்சி, இராம காதை, அரசியல்

**முன்னுரை**

கம்பர் கூறும் அரசியல் நெறிகள், ஒரு நாட்டை நல்லாட்சியுடன் வழிநடத்துவதற்கான உயரிய கோட்பாடுகளாக அமைகின்றன. மன்னன் மக்களின் நலனையே முதன்மையாகக் கருத வேண்டும்; நீதி, அறம், கருணை, நடுநிலைமை, ஆலோசனை, கல்வி, வீரியம் ஆகிய பண்புகளுடன் ஆட்சி செய்ய வேண்டும் என்பதை அவர் வலியுறுத்துகிறார். மக்கள் நலனே அரசின் நோக்கம் என்பதையும், அரசன் குடிமக்களின் பாதுகாவலனாகவும் பணியாளனாகவும் திகழ வேண்டும் என்பதையும் பல இடங்களில் எடுத்துக்காட்டுகிறார். இவற்றை பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**அரசு அமையும் முறை**

அரசன் எவ்வாறு விளங்க வேண்டும், அரசு எவ்வாறு அமைக்க வேண்டும் என்ற முறைமையைக் கம்பர் வெளிப்படையாகத் தருகின்றார்.

“முறையறிந்து அவாவை நீக்கி
முனிவுழி முனிந்து வெஃகும்
இறையறிந்து உயிர்க்கு நல்கும்
இசைகெழு வேந்தன் காக்கப்
பொறை தவிர்ந்து உயிர்க்கும்
தெய்வப் பூதலம்”[1]

அரசன் அறமுறை அறிந்தவனாதல் வேண்டும். ஆசை அற்றவனாதல் வேண்டும். ஒறுத்தற்குரிய இடத்தில் ஒறுத்து அனைத்தற் குரிய இடத்தில் அணைத்து முறையோடு இறை பெற்று குடிகளுக்கு உதவி புகழ் பெற்று மக்களின் துன்பத்தை நீக்கி இம்மண்ணுலகைப் பொன்னுலகாக்கி நிற்றல் கடன் என்பதைக் கம்பர் தெளிவு படுத்துகின்றார்.

**கம்பர் கூறும் மன்னர் கடமை**

மன்னன் இல்லாவிட்டால் உலகம் வாழ இயலாது. மன்னனே எல்லா அதிகாரங்க ளையும் பெற்றவன் என்பது முன்னோர் கருத்து.

**“நெல்லும் உயிர் அன்றே நீரும் உயிர் அன்றே**

**மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்”**[2] (புறம்.186)

‘நாட்டுக்கு உயிர் மூச்சாய் இருப்பது நெல்லும் நீரும் அன்று மன்னனுடைய செங் கோல் முறையே ஆகும். உலகம் மன்னனை உயிராகக் கொண்டிருக்கின்றது’ என்று புறநானூறு கூறுகிறது.

கம்பர் காலத்தில் இக்கருத்து மாறிவிட்டது. குடிகள் தான் உயிர். மன்னன் தான் உடம்பு. உயிரில்லாவிட்டால், குடிகளின் ஆதரவும், ஒத்துழைப்பும் இல்லாவிட்டால் அரசாட்சி இயங்க முடியாது என்ற கருத்து கம்பர் காலத்தில் தோன்றிவிட்டது.

**“வையம் மன்னுயிராக அம்மன்னுயிர்**

**உய்யத் தாங்கும் உடல் அன்ன மன்னனுக்கு**

**ஐயம் இன்றி அறம் கடவாது அருள்**

**மெய்யின் நின்றபின் வேள்வியும் வேண்டுமே”**[3] (அயோத்தி, மந்தரை சூ.17)

உலகத்தை உயிராகக் கொண்டு அவ்வுயிர் களைத் தாங்கும் உடலாகத் தன்னை எண்ணிக் கொண்டு அதற்கேற்றார்படி அரசு நடத்துகின்றவனே அரசன். அறம் என்பது ஐயம் இல்லாமல் அவனுக்குத் துணை நிற்கும். அரசன் இரக்கத்தையும் உண்மை யையும் துணையாகக் கொண்டு நிற்பானா யின் அவன் வேள்வி செய்யவும் தேவை இல்லை. என்று கம்பர் இச்செய்யுளிலே அரசனுக்கான கடமையையும் உரைக் கின்றார். மேலும் தன்னாட்டில் வாழும் மக்கள் முதல் எந்த உயிராக இருப்பினும் அவற்றின் விருப்பத்தை நிறைவேற்றும் ஓர் உடம்பே மன்னன் என்பதை,

**“வயிரவான் பூண் அணி மடங்கல் மொய்ம்பினான்**

**உயிர் எலாம் தன் உயிர் ஒக்க ஓம்பலால்**

**செயிர் இலா உலகினில் சென்று நின்று வாழ்**

**உயிரெலாம் உரைவது ஓர் உடம்பும் ஆயினான்”**[4] என்று கம்பர் காட்டுகிறார்.

உடம்பாகிய மன்னன் உயிராகிய மக்களை எவ்வாறு கருதினான் எவ்வாறு நடத்தினான் என்பதை

**“வையகம் முழுவதும் வறிஞன் ஓம்பும் ஓர்**

**செய் எனக் காத்து இனிது அரசு செய்கிறான்”**[5] (பா.184)

என்று காட்டுகின்றார்.

**அரசர் ஆளும் நாடு**

பற்பல குழுக்களும் ஆட்சியைப் பாழ் படுத்தாத உள்நாட்டுப் பகைவர்களும் அரசனைத் துன்புறுத்தும் கொலைகாரக் குறும்பர்களும் இல்லாத நாடே சிறந்த நாடு என்றார் வள்ளுவர், இதனை

**“பல் குழுவும் பாழ் செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்**

**கொல்குறும்பும் இல்லது நாடு”**[6] (குறள்-735)

என்ற குறள் வழி அறியலாம்.

இக்கருத்தை அடியொட்டி பகையின்றி ஒரு நாடு வாழ்தல் வேண்டும் என்று கம்பர் தம் இராமகாதையின் தொடக்கத்தில் ஒரு காட்சி யில் காட்டுகிறார்.

மாந்தாதா என்னும் அரசன் தசரதனின் முன்னோர்களில் ஒருவன் அம்மன்னனின் ஆட்சிக் காலத்தில் ஓடுகின்ற ஆற்றுநீரில் ஒரு மானும் புலியும் அருகருகே இருந்து நீர் அருந்தின. பிறகு இரண்டும் அமைதியாகச் சென்றன. ஒன்றால் மற்றொன்றுக்குத் தொல்லை இல்லை. இதனை,

**“...புலிப் போத்தும் புல்வாயும்**

**ஒரு துறையில் நீர் உண்ண**

**உலகு ஆண்டான் உளன் ஒருவன்”**[7] (பால. வரலாற்று.7)

என்ற பாடல் வரிகள் உணர்த்தும். விலங்குகளே இப்படி வாழ்கின்றன எனில் அந்நாட்டு மக்கள் எத்தகையவராக இருப்பார் என்று நம்மை உணர வைத்துள்ளார் கம்பர். பகைவர் தொல்லை இல்லாமல் ஒரு நாடு இருக்க வேண்டும் என்பதே இதன் மூலம் கம்பர் உணர்த்தும் கருத்தாகும். வீரச் செல்வம் உள்ளவர்கள், மெய்யுரைக்கும் பண்புச் செல்வம் கோசல நாட்டில் எல்லோரும் பொருட்செல்வம் உள்ளவர்கள். உள்ளவர்கள், கல்விச் செல்வமும் உள்ளவர்கள் என்பதை,

**“வண்மை யில்லை, ஓர் வறுமையின்**
**மையால்**
**திண்மையில்லை, நேர் செறுநர்**
**இன்மையால்**
**உண்மையில்லை, பொய்யுரை**
**இலாமையால்**
**ஒண்மையில்லை, பல் கேள்வி மேவலால்”[8]**

இப்பாடல் வழி கம்பர் உரைக்கின்றார். இத்தகைய தாழ்விலாச் செல்வரைக் கொண்டிருந்தது கோசல நாடு.

ஒரு நாடு எப்படியிருக்க வேண்டும் என்பதை மேற்கண்ட கம்பரின் பாடல் வரிகள் அழகுறக் காட்டுகின்றன.

**அரசர்க்குரிய தகுதிகள்**

அரசர்க்கு இருக்க வேண்டிய தகுதிகளைப் பட்டியலிடும் போது கம்பர் அஞ்சாமை, ஊக்கம் இவை இரண்டும் அவசியம் என வலியுறுத்துகிறார்.

**“ஆள் எலாம் இழந்த தேரும்**
**ஆனையும் ஆடல் மாவும்**
**நாள் எலாம் எண்ணினாலும்**
**தொலைவிலர் நாதர் இன்றித்**
**தாள் எலாம் குலைய**
**ஓடித் திரிவன தாங்கல் ஆற்றும்**
**கோள் இலா மன்னன் நாட்டுக்**
**குடியெனக் குலைவ கண்டான்”[9]**

அரக்கர்களும் குரக்கர்களும் கடும் போர் புரிகின்றனர். அரக்கர்கள் மழை போல அம்புகளைப் பொழிகின்றனர். பதிலுக்கு இலக்குவனும் அம்புகளை விடுகின்றான். எங்கும் பிணம் எங்கும் குறுதியாறு. இவ்வாறு காட்சியளிக்கும் அவ்விடம், நால்வகைப் படைகளும் சிதறி அழிந்து, தக்க தலைவர் இன்றி, குடிகளை தாங்கும் ஆற்றல் இல்லா அரசனின் நாட்டு மக்களைப் போல் கலைந்து சிதறி ஓடினார்கள் என்று காட்டுகின்றார்.

**கம்பர் காட்டும் அமைச்சர்கள்**

கம்பன் காட்டும் அமைச்சர்கள் கேள்வி ஞானம் மிகுதியும் பெற்றவர்கள். பரம்பரை யாக நற்குடியில் தோன்றி பல கலைகளை யும் கற்றுத் தேர்ந்தவர்கள்.

நடப்பதைக் கொண்டே இனி என்ன நடக்கும் என்பதை உணரும் ஆற்றல் பெற்றவர்கள் வினையால் தீமை நேரினும் அதைப் பற்றிக் கவலை கொள்ளாமல் அதனையும் மாற்றும் திறம் வாய்ந்தவர்கள். அரிய அரசியல் நூல் களையும் கற்றுத் தேர்ந்தவர்கள் எல்லா வற்றையும் விட மானமே பெரிது என எண்ணும் இயல்பினர் என்னும் பொருளில்

**“உற்றது கொண்டு மேல்வந்து**
**உறுபொருள் உணரும் கோளார்**
**மற்றது வினையின் வந்தது ஆயினும்**
**மாற்றல் ஆற்றும்**
**பெற்றியர்; பிறப்பின் மேன்மைப்**
**பெரியவர்; அரிய நூலும்**
**கற்றவர்; மானம்; நோக்கின்**
**கவரிமா அனைய நீரார்”[10]** (அயோத்தி, மந்திர -7) என்று காட்டுகின்றார்.

கம்பன் காட்டும் அமைச்சர்கள் தன் உயிரைப்பற்றி எண்ணாது அரசன் சினந்தாலும், அச்சினத்தைத் தாங்கிக் கொண்டு நீதியை விடாமல் இடித்துச் செல்லும் இயல்பினர். நேர்மை வழியில் நடப்பவர்கள். முக்காலமும் அறிந்தவர்கள். தாம் பலராக இருப்பினும் பல கருத்துக் களைக் கூறாது அனைவரும் ஒன்றுபட்டு ஒருமித்த கருத்து கூறும் இயல்புடை யவர்கள். இதனை கம்பர்,

**“தம் உயிர்க்கு இறுகி எண்ணார்**
**தலைமகன் வெகுண்ட போதும்**
**வெம்மையைத் தாங்கி நீதி**
**விடாது நின்று உரைக்கும் வீரர்**
**செம்மையின் திறம் பல செல்லாத்**
**தேற்றத்தார் தெரியும் காலம்**
**மும்மையும் உணர வல்லார்**

ஒருமையே மொழியும் நீரார்"[11] (அயோத்தி. மந்திர.9)

இவ்வாறு அமைச்சர்களின் தகுதியைப் பற்றிக் கூறுகின்றார். வள்ளுவர் கூறும் அமைச்சர் இலக்கணம் இங்கு நினைவு கூரத்தக்கது.

"தெரிதலும், தேர்ந்து செயலும், ஒருதலையாச்

சொல்லலும் வல்லது அமைச்சு"[12]

(அதி. 64. கு.4)

செய்யத்தக்க செயல்களை ஆராய்ந்து அறிவதும், அச்செயல் முடிவதற்குரிய வழி களை ஆராய்ந்து செய்வதும், உறுதியாகத் தன் கருத்தை வெளியிடுவதும் ஆகியவற்றில் வல்லவனே அமைச்சனாவான். வள்ளுவரின் இக்கருத்தே அமைச்சர்களின் தகுதி குறித்த கம்பனின் கருத்திற்கு அடிப்படையாக அமைகிறது.

## முடிவுரை

கம்பர் தம் இராமகாதையில் அரச முறைமை கள், இயல்புகள் பலவற்றை ஆங்காங்கு சுட்டிச் செல்கிறார். அரசு பற்றிப் பேசும் போதெல்லாம் கம்பர் கொடை, முறை, வீரம், ஊக்கம், அஞ்சாமை, செருக்கு ஆகிய வைகளை விளக்கிக் காட்டுகிறார். அரசியல் திறம்பட நடக்க வேண்டுமாயின் ஆளுவோ ரும், அறிவுள்ளவர்களாக, ஆற்றல் உள்ளவர் களாக, நடுநிலைமையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இன்சொல்லும், இன்முகமும் கொண்டு எல்லோரையும் தம் வசமாக்கும் தன்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்ற கருத்துக்களை வெளிக்காட்டுகின்றார்.

## அடிக்குறிப்புகள்

1. கம்பர் பாடல்
2. புறம் - 186
3. அயோத்தி, மந்தரை சூ.17
4. கம்பர் பாடல்
5. மேலது 184
6. குறள் -735
7. பால. வரலாற்று.7
8. மேலது
9. மேலது
10. அயோத்தி, மந்திர-7)
11. அயோத்தி.மந்திர.9)
12. அதி 64.(கு. பா.4)

## துணைநூற்பட்டியல்

### முதன்மை சான்றாதாரங்கள்

1. அழகிரிசாமி.கு. கம்பராமாயணம் சுந்தரகாண்டம் தமிழ் புத்தகாலயம், 576, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-05. முதல்பதிப்பு ஜூலை, 1965.
2. ஆதித்தன். அகு. கம்பர் கவிநயம் வானதி பதிப்பகம், தி.நகர், சென்னை-17. முதல் பதிப்பு - பிப்ரவரி, 1974.
3. இஸ்மாயில்.எம்.எம்., கம்பன்கண்ட இராமன் வானதி பதிப்பகம், 23, தீனதயாளு தெரு. தி.நகர், சென்னை-17. முதல் பதிப்பு-14.3.76.

### துணைமைச் சான்றாதாரங்கள்

1. சுப்பிரமணியன், ச.வே.. கம்பன் கவிநயம், தொகுதி-2 மணிவாசகர் பதிப்பகம், 31, சிங்கர் 600108. முதல் பதிப்பு டிசம்பர். 2013. தெரு. பாரிமுனை, சென்னை
2. சதாசிவம். மு. கம்பனின் வைரவரிகள், மணிவாசகர் பதிப்பகம், 31. சிங்கர் தெரு. பாரிமுனை, சென்னை -18. முதல் பதிப்பு -19 ஆகஸ்ட், 2005.
3. சதாசிவம். மு. கம்பன் வழங்கும் மோனை இன்பம், மீரா நிலையம், 7. வள்ளியம்மை, இரண்டாம் தெரு. பெரிய வலக, 638004.
4. கோபால கிருஷ்ணமாச்சாரியார். வைமு. உரையாசிரியர் கம்பராமாயணம்-பாலக் காண்டம் மூ.உ. 171. (புதியது. 18) உமா பதிப்பகம், பவளக்கார தெரு, மண்ணடி, சென்னை 600001. முதல் பதிப்பு ஏப்ரல், 2006.
5. வை. மு. கோ. உ. ஆ கம்பராமாயணம் அயோத்தியா காண்டம், மூ.உ. 171. (புதியது. 18) 600001. முதல் பதிப்பு உமா பதிப்பகம், பவளக்கார தெரு, மண்ணடி, சென்னை ஏப்ரல், 2006.